# பாரதியின் பக்தி நெறி

**சௌ. சசிகுமார்**
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை
பொ.செ.பு.த.எம்.ஜி.ஆர். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
சீர்காழி

**மலர்:** 3
**இதழ்:** 3
**தொகுதி:** II
**மாதம்:** ஜனவரி
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

தமிழ் இலக்கியத்தில் பக்திநிலை காலந்தோறும் பல்வேறு நிலைகளில் வளர்ந்துள்ளது. அதை தத்துவப் பின்னணிக்கேற்ப வகைப்படுத்தலாம். சங்க காலத்தில் வைதீகம், சமணம், பவுத்தம், மாலியம், சிவனியம், இயற்கை நெறி போன்று பலவகையான சமயங்கள் காணப்படுகின்றன. தமிழ் மொழியில், சமண பவுத்த தத்துவங்கள் தங்கள் கொள்கைகளை வெளிப்படுத்த இலக்கியங்களை உருவாக்கியுள்ளன. அதுபோல் பிற்கால பக்தி இலக்கியங்கள் சைவ இலக்கியங்களும் வைவணவ இலக்கியங்களும் நிறைந்ததாகத் தமிழ் காணப்படுகிறது. அதனை அடியொற்றியே சிற்றிலக்கியங்களும், வள்ளலாரின் திருவருட்பா போன்றவைகளையும் பார்க்கமுடிகின்றது. ஐரோப்பியர் வருகைக்குப்பின் தமிழில் இலக்கிய வடிவம் மாறுதலுக்கு உட்பட்டாலும் பாரதியின் பாடல்கள் பெரும்பாலும் மரபினை ஒத்தும், சமூக அரசியல், பொருளியல்தளத்தில் அனுபவங்கள் பாடல்களாகப் பரிணமித்துள்ளன. மொழி, கலை இலக்கியம், தேசிய விடுதலை, பெண் விடுதலை அறிவியல் சிந்தனைகள் எனப் பல தளங்கள் காணப்பட்டாலும் பக்தி அல்லது இறைமைநெறி முற்றிலும் மாறுபட்ட சிந்தனையைக் கொண்டுள்ளது. பல்வேறு தெய்வங்கள் இருந்த போதிலும் இறை ஒன்றே அது பரம்பொருள் என்று பாரதியார் பல இடங்களில் குறிப்பிடுகிறார்.

மனித இனம் ஐந்தறிவுடைய உயிரினங்களிடம் இருந்து வேறுபட்டு மேம்பட்ட ஆறாவது அறிவினைக்கொண்டு விளங்குகிறது. இவ்வினம் அன்பினை அடிப்படையாகக்கொண்டது. அத்தகைய அன்பு மெய்ப்பொருளாக விளங்குகிறது. அன்பின் வெளிப்பாடே பக்தி, அப்பக்தியின் வெளிப்பாடே வழிபாடு ஆகும். பிறவியாகிய இப்பெருங்கடலை நீந்துவதற்குப் பற்றாக இருப்பது இறையன்பாகும். மெய்வருந்தும் உழைப்பு, கூலியைத் தந்தாலும், இறைவனைச் சார்ந்து வாழும் நிலையே பக்திநெறியாகக் கொள்ளாலம். இவ்வாறான பக்திநிலையைப் பாரதியின் பாடல்களில் காணமுடிகிறது.

பாரதிக்கு முன்னும்பின்னும் பக்தியைப் பாடிய கவிஞர் பலரும் இறைவனிடம் பல்வேறு வரங்களை வேண்டி நிற்கின்றனர். இவ்வுலகம் வெறும் மாயை என்றும், பிறவி என்பது துன்பம் நிறைந்தது என்றும், இத்துன்பதிலிருந்து விடுபட்டு இறைவனுடன் கலந்து, பிறவியே இல்லாத பெருநிலை பெறவேண்டும் என்பது சித்தாந்தவாதிகளின் எண்ணமாக உள்ளது.

பக்திநெறியைப் பின்பற்றும் வேறுசிலர் இறைவனிடம் பொருளும் பொன்னும் போகமும் வேண்டாமல் அருளும் அன்பும் அறனும் வேண்டிநிற்கின்றனர், பாரதி போன்றோர் வாழ்வதற்குத் தேவையான பொன்னையும், பொருளையும் வேண்டிநிற்பது பக்திநெறியின் புதிய பரிமாணத்தைக் காட்டுகின்றனர்.

இவர்களுள் பாரதி அனைத்தையும் கேட்கும் பக்தனாகவும் கவிஞனாகவும் திகழ்கின்றார். இவ்வுலக வாழ்வு மாயை என்பதிலிருந்து வேறுபட்டு, வாழ்வைப் பயனுற வாழ வரங்கள் பல கேட்கின்றார். பாரதியார் தனது தோத்திரப்பாடலில்,

**வல்லமை தாராயோ- இந்த**
**மாநிலம் பயனுற வாழ்வதற்கே**
**சொல்லடி சிவசக்தி நிலச்**
**சுமையென வாழ்ந்திட புரிகுவையோ (பாரதியார் கவிதைகள் 2000:87)**

என்று ஏங்கிய ஏக்கம் பாரதியின் பக்திநெறியை வெளிப்படுத்துகிறது. அவரின் பக்தி, மனித சமூக வாழ்க்கையைத் தழுவிக்கொண்டுள்ளதையும் உணரமுடிகிறது.

பாரதி வறுமையில் வாடியபோதும் சோர்ந்துவிடாத மனத்திட்பம் படைத்தவர். வறுமையைப் பற்றிப் பல பாடல்களில் சுட்டியுள்ளார். பாரதி தோத்திரப்பாடல்களில் திருமகளிடம், வேண்டுவது பின்வருமாறு:

**செல்வம் எட்டும் எய்தி நின்னால்**
**செம்மையேறி வாழ்வேன்**
**இல்லைஎன்ற கொடுமை – உலகில்**
**இல்லையாக வைப்பேன் (பா.கவி.2000:34)**

பாரதியார் திருமகளிடம் நீயே எனக்குச் செல்வத்தைக் கொடுப்பாய். அதனைக் கொண்டு பொருள் இல்லாதவர்களுக்குச் செல்வத்தைக் கொடுத்து வறுமையை விரட்டுவேன் என்று பாடியுள்ளார். பசியால் வாடும் மக்களுக்குச் சோறுகொடுப்பதோடு கல்வியும் கொடுக்கவேண்டும் என்று பாடிய பாரதி, செல்வம் வேண்டி திருமகளிடம் வழிபடும்போது தனக்கு மட்டும் வேண்டும் என்ற குறுகிய சிந்தனை இல்லாமல் இந்த உலகத்து மக்கள் அனைவரும் அனைத்தும் பெறவேண்டும் என்ற சுயநலம் மற்ற பக்தியை வெளிப்படுத்தியுள்ளது புதுமையாக உள்ளது.

பாரதி இந்திய வழிபாட்டு முறைகளில் வேத வைதீக ஆகம வழிபாட்டில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு பக்திநெறியிலும் இறைவனைப் போற்றிப் பாடல்கள் பாடியுள்ளார் ஆயினும், அவர்காலத்திய மக்களின் வறுமையையும் பிணியையும் கருத்தில்கொண்டு தன்னால் ஏதும் செய்யமுடியாத நிலையில் தெய்வத்திடம் முறையிட்டு வேண்டுகிறார்.

**நாட்டு மக்கள் பிணியும் வறுமையும்**
**நையப் பாடென் றொடு தெய்வம் கூறுமே**
**கூட்டி மானுடச்சக்தியை ஒன்றெனக்**
**கொண்டு வைய முழுவதும் பயனுறப்**
**பாட்டிலேயறங் காட்டெனு மோர் தெய்வம்**
**பண்ணி லின்பமும் கற்பனை விந்தையும்**
**ஊட்டி எங்கும் உவகை பெருகிட**
**ஓங்கு மின் கவி ஓதெனும் வேறொன்றே (பா.கவி.2000:87)**

இப்பாடல் வழியாக நாட்டு மக்களின் துன்பத்தைப் போக்குவதற்காக நீ பாடு என்று தன்னிடம் தெய்வங்கள் கேட்பது போல் பாடியுள்ளார்.

கடவுள் வழிபாட்டு முறைகள் மக்களுக்கு மக்கள் மாறுபாடு கொண்டவை. இனத்தாலும் பண்பாட்டாலும் குழுவாலும் வாழும் நாட்டின் முறைகளாலும், பல்வேறு மாறுபாடுகள் கொண்டுள்ளன. பாரதியின் வழிபாட்டு முறைகள், கடவுள் நம்பிக்கையின் மீதும் பலருக்கு உடன்பாடு இல்லாமல் இருக்கலாம் ஆனால் அவரது பாடல்களில் நிறைந்து நிற்கும் நிறைவாழ்வுக்கான வேட்கையையும், மனிதநேயத்தையும் கடவுள் மறுப்புக்கொள்கை உடையவர்கள் மட்டும் அல்லாமல் எந்தச் சமயத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் புறக்கணித்துவிடமுடியாது.

பாரதி, தன் தேவைகளையும் ஆசைகளையும் பட்டியலிட்டுத் தெய்வத்திடம் படைக்கும் பாடல்கள் பல உள்ளன. "மனதி உறுதி வேண்டும்" என்னும் பாடல் அவற்றுள் ஒன்று. மனதிலே உறுதி, வாக்கினிலே இனிமை, நினைவிலே நன்மை, கனவு மெய்ப்படல், காரியத்தில் உறுதி, பெண்விடுதலை, வாழ்வதற்குச்செல்வம் என்னும் பற்பல வரங்களை தமது பாடல்களில் அடுக்கிச்செல்கிறார். அவற்றில் மிகுந்த கருத்தில் கொள்ளவேண்டியதை பின் வரும் வரிகள் சுட்டுகின்றன.

**மண்பயனுற வேண்டும்**
**வானகம் இங்கு தென்பட வேண்டும்**
**உண்மை நின்றிட வேண்டும்**
**ஓம், ஓம் ஓம், ஓம்! (பா.கவி.2000:70)**

இப்பாடலில் கூறப்பட்டுள்ள வானகம் இங்குத் தென்படவேண்டும் என்னும் கருத்து வானுலகத்தில் இருப்பதாக நம்பப்படும் சொர்க்கமாகக் கருதலாமா?. அந்தச் சொர்க்கம் மண்ணுலகத்தில் எவ்வாறு தோன்றும். இது பக்தியில் படைக்கப்பட்ட புதுமையாகக் காணப்படுகிறது. கிறிஸ்துவ மதத்தில் ஏசு பெருமான் இறையரசு உங்களுக்குள்ளே இருக்கிறது என்ற கருத்தை கூறியுள்ளார். இறையரசு என்பதற்குப் பலரும் பல பொருள்களைக் கூறுயுள்ளனர். அவற்றின் சாரமாக மனித குலத்தால் மனிதனுக்கு ஏற்படுகின்ற நன்மைகள் தான் இறையரசு எனக் கொள்ளலாம்.

நன்மை என்னும் சொல் வளம், செல்வம், நல்லுறவு நல்லின்பம் போன்ற அனைத்துப் பொருளையும் உள்ளடக்கியது. இதுபோன்ற முழுமை மனிதத்துக்குள்ளேயே இருக்கிறது. அம்மனிதம் இறையரசை (நல்லரசு, பொதுவுடைமை, சிறந்த மக்களாட்சி) போற்றவேண்டும். அது இம் மண்ணில் நிலைபெறும்போது வானகம் இங்குத் தென்படும் என்பது பாரதியின் எண்ணமாகக் கருதலாம்.

பாரதி தோத்திரப் பாடல்களின் வரிசையில் பக்தி என்ற தலைப்பில் தெய்வத்தின் மீது செலுத்தும் பக்தியினால் கிடைக்கும் பயன்களைக் குறிப்பிடும் போது

**"பக்தியினாலே – இந்தப்**
**பாரினில் எய்திடும் மேன்மைகள் கேளடி!**
**சிந்தம் தெளியவும் – இங்குச்**
**செய்கை அனைத்திலும் செம்மை பிறந்திடும்**
**வித்தைகள் சேரும்" (பா.கவி.2000:24)**

இப் பாடலில் பக்தியினால் காமம் ஆசை, முதலியவை, போகும் என்று பாடிய பாரதி அவர் வேண்டும் வரங்களில் இவை எல்லாம் வேண்டும் என்றும் பாடுகின்றார். பாரசக்தி தேவியிடம் காணி நிலம் கேட்டுத் தொடங்கிய பாரதி, சராசரி மனிதனுக்கு இருக்கவேண்டிய ஆசைகளைக் கனவுகளைப் பட்டியலிடுகின்றார். மேலும் யோகசித்தி என்னும் பாடலில்

**"தாயே எனக்கு மிக நிதியும் – அறம்**
**தன்னைக் காக்கும் ஒரு திறனும் – தரு**
**வாயே..........**
**தொழில் பண்ண பெருநிதியும் வேண்டும்- அதில்**
**பல்லோர் துணை புரிதல்வேண்டும்" (பா.கவி.2000:80)**

எனப் பல வரங்கள் வேண்டுகின்றார். நூறுவயது நீண்ட புகழ், நிறைசெல்வம், பேரழகு, இவற்றை எல்லாம் வேண்டுகிறார். பாரதி.

**"ஆடுகளும் மாடுகளும் அழகுடைய பரியும்**
**வீடுகளும் நெடு நிலமும் விரைவினிலே தருவாய்" (பா.கவி.2000:36)**

எனத் திருமகளிடம் கேட்கிறார். மேலும்,

**“நாளும் எனையலைக்க லாமோ? உள்ளம்**
**நாடும் பொருள் அடைதற்கன்றொ – மலர்த்**
**தாளில் விழுந்து அபயங்கேட்டேன் – அது**
**தாரா யெனில் உயிரைத் தீராய் – துன்பம்**
**நீளில் உயிர் தரிக்க மாட்டேன்” (பா.கவி.2000:81)**

என்று பாரதி உள்ளம் நாடும் பொருளைக் காலம் தாழ்த்தாமல் கொடு என்னை மலர்ப்பாதத்தில் அடைக்கலமாகக்கொள் இல்லைஎனில் இத்துன்பத்தினால் உயிர் வாழ் இயலாது என திருமகளிடம் வற்புறுத்துகின்றார்.

பக்தி, காமத்தையும் ஆசையையும் போக்கும் என்று பாடிய பாரதி இவ்வாறான வரங்களை எல்லாம் கேட்பது முரண்பாடாகத் தோன்றலாம். ஆனால் வாழ்வை அழிக்கும் மிகு காமத்தையும் இயல்பு கடந்த பேராசையையும் பக்தியால் போக்கவேண்டும் என்பது பாரதியின் எண்ணமாக இருக்கலாம். உலக உயிர் இயக்கத்தின் அடிநாதமான காமத்தையோ உலக வாழ்வின் முக்கிய தேவயான ஆசையையோ போக்கிக்கொள்ள வேண்டும் எனப் பாரதி கருதவில்லை. இது அரவிந்தரின் வாழ்வனைத்தும் யோகம் என்னும் கொள்கையின் தாக்கமாக இருக்கலாம்.

பாரதி பல்வேறு தெய்வங்களிடம் வேண்டுவனவற்றில் செல்வத்திற்கே முக்கியத்துவம் கொடுக்கின்றார். “அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை” என்பது வள்ளுவம். பொருள் குவிந்து கிடக்கும் கயவர்களிடம் அறிவில் சிறந்த வறுமையுற்றவர்கள் கைக்கட்டி வாய்ப்பொத்தி நிற்கும்நிலை பாரதியின் காலத்தில் இருந்துள்ளது. எனவே,

**போதுமிவ் வறுமை எல்லாம் – எந்தப்**
**போதிலும் சிறுமை யின்புகை தனிலே**
**வேதனைப்படு மனமும்**
**……**
**எழ்கடல் ஓடியும் ஓர் பயன்**
**எய்திட வழியின்றி இருப்பதுவும்**
**வீழ்கலிக் கொடு நோய்தான் –வைய**
**மீதினில் வறுமையோர் கொடுமையன்றோ” !(பா.கவி.2000:31)**

என்று மனித ஆளுமையை அழிக்கும் வறுமையைப் போக்க மானுடம் செழிக்கச் செல்வம் தருமாறு பாரதி வேண்டுவதில் வியப்பில்லை.

தெய்வங்களிடம் பாரதி வேண்டும் வரங்களை மூன்று வகையாகப் பகுக்கலாம். ஒன்று பண்பு மேம்பாட்டிற்கான வரங்கள். அவை: அன்பு அருள், இனிமை, எளிமை, தூய்மை போன்றவை. இரண்டு ஆன்மீகப் பக்குவத்திற்கான வரங்கள் அவை. புலனடக்கம். வினையழிதல், இறையுடன்கலத்தல் போன்றவை. மூன்று உலகியல் சார்ந்த வரங்கள். அவை. செல்வம், துன்பமில்லா வாழ்வு, தொழில், கல்வி, புகழ், வெற்றி போன்றவை. இவை மூன்றும் பாரதியின் பக்தி பாடல்களில் விரவி கலந்து கிடப்பதைக் காணமுடிகின்றன.

உடல் சார்ந்த தேவைகள், உணர்வு சார்ந்த தேவைகள், ஆன்மீகத் தேவைகள் ஆகிய அனைத்துத் தேவைகளும் நிறைவுபெற்று வாழும் போதே மனித வாழ்வு நிறைவு பெறும். அத்தகைய வாழ்வை அனைத்து மக்களும் வாழப் பாரதி இறைவனைச் சார்ந்துநின்று வேண்டுகிறார். தனக்காக மட்டுமல்லாமல் மானுடம் முழுமையும் பயனடையவேண்டும் எனப் பாரதி எண்ணுகிறார். பரந்துபட்ட அன்பை வழங்கும் பாரதியின் பக்திதிறம் போற்றுதற்குரியது

**சான்றுகள்**

1. பாரதியார் கவிதைகள் தொகுப்பு 2000, மணிவாசர் பதிப்பகம், சிதம்பரம்.
2. கந்தசாமி, சோ.ந. 2003, தமிழும் தத்துவமும், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.
3. கோதண்டராமன், ப.1990, புதுவையில் பாரதி, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை.
4. ஞானி, 2002, பரதியின் கவித்துவம், தமிழ்ப்பல்கலைக்கழகம் தஞ்சாவூர்.
5. தோதாத்ரி. எஸ், 2004, பாரதி பற்றி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
6. மணி, பெ.சு. 1989, பத்திரிகையாளர் பாரதி, பூங்கொடிப் பதிப்பகம், சென்னை.